# சட்டவாக்க விளக்கம்:
# தகவலறியும் சட்டமூலம் 2015

## 1. தகவலறியும் சட்டமூலம் (RTI), 2015 தொடர்பான பிரதான பரிந்துரைகளின் சாரம்சம்

| இல. | கரிசனை | பரிந்துரை |
|---|---|---|
| 1. | **பிரிவு 40 இன்** கீழ் பலவீனமான அம்பலப்படுத்துவோர் பகுதி. | நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் தனிநபர்களை பாதுகாப்பதற்கு அம்பலப்படுத்துவோர் பகுதியை வலுப்படுத்தல் (விசேட RTI கோரிக்கைகளுடன் சம்பந்தப்படாத)<br><br>அவ்வாறான உயிர்ப்புள்ள வெளிப்படுத்தும் நபர்கள் பொது துறையின் ஊழல் மற்றும் முறைகேடான முகாமைதுவத்தை வெளிக்கொண்டு வர இன்றியமையாத கருவிகளாவர். |
| 2. | தாமதப்படுத்தப்படும் RTI கோரிக்கைகளுக்கு தண்டனை இல்லை. | தீய எண்ணத்துடன் தகவல் கோரிக்கைகளை நிராகரிக்கம் தகவல் அதிகாரிகளுக்கான தண்டனைகளை அறிமுகப்படுத்தல்.<br><br>இவ் வகையான தண்டனைகள் இந்திய தகவல் அறியும் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. |
| 3. | 'பொது சேவை' புரியும் நிறுவனங்கள் **பிரிவு 43 இன்** கீழ் பொது அதிகார சபைகள் என்ற வரைவிலக்கணத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. | 'பொது சேவை' என்ற குறிப்புதவியை விலக்கி, 'பொது செயற்பாடு' என்ற குறிப்புதவியை வைத்திருத்தல். |
| 4. | RTI இன் கீழ் இ-நல்லாட்சி முறை பொறுப்புகள் தொடர்பான போதியளவு குறிப்புதவிகள் இன்மை.<br><br>பொது அதிகாரசபைகளின் *பௌதீக வசதிகளில்* நிர்ணயிக்கப்பட்ட தகவல்கள் காட்சிப்படுத்தப்படல் வேண்டும் என இந்த சட்டமூலம் கூறுகின்றது (**பிரிவு 8(4), 10 and 26(1)** | தமது பௌதீக வசதிகளுக்கு மேலதிகமாக தமது *உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திலும்* தகவல்களை பிரசுரிப்பதனை RTIஇன் கீழ் தகவலறியும் உரிமை ஆணைக்குழு மற்றும் பொது அதிகார சபைகளுக்கு கட்டாயமாக்குதல். |

| | | |
|---|---|---|
| **5.** | பிரிவு 5 (1) (ஊ)இன் நோக்கொல்லைக்குள் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் வெளிப்படையான சேர்க்கை | Remove the explicit reference to the Attorney General's Department.<br><br>The terms 'information [that] consist[s] of any communication, between a professional and a public authority to whom such professional provides services, which is not permitted to be disclosed under any written Law' adequately covers lawyer-client privilege. Therefore communications between a public authority and the Attorney General's Department is already protected by the first part of the clause, and explicit reference to the Attorney General's Department is unnecessary. |
| **6.** | **பிரிவு 10**இன் கீழ் பொது அதிகார சபைகளுக்கு RTI அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட அறிக்கைச் சக்கரம் இல்லை.<br><br>The section only refers to the submission of 'annual reports' | ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 31ம் திகதி RIT அறிக்கைகள் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிற்கு சமர்பிக்கப்பட்டு இருப்பதனை கட்டாயமாக்குதல். இது துல்லியமான கண்காணிப்பிற்கு வழிகோலும். |
| **7.** | Under **Section 25(3)**, a citizen can only seek an expedited response to an information request only if it applies to his/her **own** life and liberty | Amend Section 25(3) to ensure that a request for information that is necessary to safeguard the life or liberty of **any person** including a person other than the citizen making the request shall receive a response within forty-eight hours.<br><br>This is to enable families of arrested, disappeared or missing persons to request information from the relevant authorities and receive information without delay. Section 24(5)(c) sets up this possibility, but section 25(3) then narrows its scope by restricting it to information pertaining to the citizen making the request. |

## 2. இலங்கையில் தகவலறியும் சட்ட காலவரிசை

| | |
|---|---|
| 1996: | *தகவலறியும் சுதந்திர சட்டமூலம்* |
| 2000: | *உத்தேச அரசியலமைப்பு திருத்த தொகுதி* |
| 2003: | *தகவலறியும் சட்டமூலம்* |
| 2015: | *அரசியலமைப்பின் 19வது திருத்தம்* |

### *(i) தகவலறியும் சுதந்திர சட்டமூலம்*

1996ஆம் ஆண்டில் தகவலறியும் சுதந்திர சட்டமூல வரைபினை இலங்கை சட்ட ஆணைக்குழு சமா்ப்பித்தது. இந்த வரைபானது பரவலாக விநியோகிக்கப்பட்டாலும், பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிக்கப்படவில்லை.

### *(ii) அரசியலமைப்பு திருத்த பொதி*

1995 முதல் 2000 வரை அரசியலமைப்பு திருத்தத்தை அறிமுகப்படுத்துவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. 2000இல், அடிப்படை உரிமைகள் பிரிவின் கீழ் தகவலறியும் உரிமைக்கு அரசியலமைப்பு பாதுகாப்பினை அளிப்பதாக அரசியலமைப்பு சட்டமூல வரைபினை வழங்கியது. எவ்வாறாயினும், இந்த சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு அறிமுகப்படுத்தவில்லை.

### *(iii) தகவலறியும் உரிமை சட்டமூலம்*

2002ஆம் ஆண்டில், தகவலறியும் சுதந்திர சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு இரு கட்சிகள் சார்ந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. மேலும், ஊடகமும், நுனவைழச'ள புரடைன போன்ற சிவில் சமூக நிறுவனங்களும் அரசாங்கத்துடன் இணைந்து சட்டமூல வரைபுக்கும், வடிவமைக்கும் உதவின. இந்த செயற்பாடு தகவலறியும் சட்டமூல வரைபுநகலிற்கு வழிகோலியதுடன், 2004ஆம் ஆண்டு அமைச்சரவை அனுமதியும் பெற்றது. எவ்வாறாயினும், அமைச்சரவை அங்கீகாரம் பெற்று சிறிது காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) அரசாங்கம் கலைந்தது. இதன் காரணமாக இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படவில்லை.

2011ஆம் ஆண்டில் ஐ.தே.ச பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய அவர்கள் 2003ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூல வரைபினை தனியாள் சட்டமூலமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முயற்சித்தார்.[1] ஆரம்பத்தில், அரசாங்கம் தாமாக தகவலறியும் சுதந்திரத்தை முன்னிறுத்துவதனை இலக்காகக் கொண்டு சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த முயற்சிப்பதாக கூறி கரு ஜயசூரிய அவர்களை சட்டமூலத்தை மீளப்பெற்றுக் கொள்ளுமாறு சம்மதிக்க வைத்தது.

[1] டிலி'ா அபேசுந்தர, 'தகவலறியும் உரிமைச் சட்டம்', *The Sunday Leader* b 2015 http://www.thesundayleader.lk/2012/05/27/right-to-information-act/ (20 ஒக்டோபர் 2015 பார்க்கப்பட்டது).

இது சார்ந்த சட்ட முயற்சிகள் எதுவும் முன்வைக்கப்படாமையால், 2011ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் ஜயசூரிய அவர்கள் பாராளுமன்றத்தில் மீண்டும் சட்டமூலத்தை முன்வைத்தார். எவ்வாறாயினும், அது தோற்கடிக்கப்பட்டது. 97 உறுப்பினர்கள் சட்டமூலத்திற்கு எதிராகவும், 34 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர்.[2]

### *(iv) அரசியலமைப்பின் 19வது திருத்தம்*

அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் உள்;ர் அதிகார சபைகள் உள்ளடங்கலாக பல்வேறு பொது அங்கங்களினால் அண்மையில் இயற்றப்பட்ட 19வது திருத்தம் தகவலறியும் சட்டத்திற்கான அணுகும் வசதிக்கு வெளிப்படையாக உத்தரவாதமளித்தது. எவ்வாறாயினும், உறுப்புரை 14அ இன் கீழ், சட்டத்தினால் அளிக்கப்பட்டவாறே இந்த உரிமை அமுலாக்கப்படக் கூடியதாகும். எனவே, தகவலறியும் உரிமை சட்டம் இல்லாத நிலையில், தகவலறியும் சட்டத்திற்கான அரசியலமைப்பு சார் பாதுகாப்பு பிரயோகத்தில் சாத்தியமற்றதாகின்றது.

## 3. 2015 தகவலறியும் உரிமை பிரசாரம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் '100 நாட்கள் நிகழ்ச்சி'இன் வாக்குறுதிகளில் ஒன்றாக தகவலறியும் சட்டத்தை இயற்றல் உள்ளது.[3] இதன் தொடர்ச்சியாக 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தகவலறியும் சட்டத்திற்கான கலந்தாய்வு செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூலமே இதன்போது கலந்துரையாடப்பட்டது. (சட்டமூலத்தின் மூலப்பிரதி)

சட்டமூலம் தொடர்பில் தமது பரிந்துரைகளை முன்வைக்குமாறு சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், ஊடகவியலாளர்களும் (வர்ணனையாளர்கள்) அழைக்கப்பட்டனர். மாதிரி சட்டமூலம் தொடர்பான செயற்பாட்டாளர்களின் பிரதான கரிசனைகள் பின்வருமாறு:

### (a) RTI நிராகரிப்புக்கான பரந்த விதிவிலக்குகள்

RTI கோரிக்கைகள் நிரகாரிக்கப்படக் கூடிய விதிவிலக்குகளை உண்மையான மாதிரி RTI சட்டமூலம் பரந்தளவில் கட்டமைக்கப்பட்டது.

உதாரணமாக:

'வெளிப்படுத்தலுக்கு சம்பந்தப்பட்ட நபர் எழுத்து மூலம் இணங்காத பட்சத்தில், ஏதேனும் வர்த்தக இரகசியங்களை வெளிப்படுத்துமாயின் அல்லது எந்தவொரு நபரினதும், நபரின் வர்த்தக ஆர்வங்களுக்கு தீங்கு விளைவிக்குமாயின்' கோரப்பட்ட தகவல்கள் நிராகரிக்கப்படலாம் என ஆரம்ப RTI சட்டமூல வரைபின் **பிரிவு 5 (ஈ)** தெரிவிக்கின்றது.[4]

'வர்த்தக ஆர்வங்கள்' என்ற பதம் தெளிவற்றதாக இருப்பதாகவும், முறைகேடான செயற்பாட்டுக்கான சாத்தியங்களை உள்ளடக்கியிருப்பதாகவும், வர்ணனையாளர்கள் வாதங்களை முன்வைத்தனர்.[5]

---

2 *Ibid.*
3 மைத்திரிமீட்டர், 100 நாட்களில், நூற்றுக்கு பெற்ற மதிப்பெண்கள் http://www.manthri.lk/en/maithrimeter (20 ஒக்டோபர் 2015 பார்க்கப்பட்டது).
4 Verite Research: தகவலறியும் சட்டமூல வரைபு தொடர்பான அவதானிப்புகள் (பெப்ரவரி 2015).
5 *Ibid.*

### (b) அம்பலப்படுத்துவோருக்கான பாதுகாப்பில் பலவீனம்

ஆரம்ப RTI சட்டமூல வரைபின் ‘அம்பலப்படுத்துவோர் பிரிவு’ சார்ந்த கரிசனைகளை வர்ணனையாளர்கள் முன்வைத்தனர்.

ஆரம்ப RTI சட்டமூல வரைபின் **பிரிவு 38**ஆனது, சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு அல்லது வெளியிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகப்பூர்வ தகவல்களுக்குமான பாதுகாப்பினை வழங்குகின்றது.

பொது அதிகார சபைகளிற்குள் தவறான செயற்பாடு மற்றும் முறைகேடான நிதி முகாமைத்துவம் குறித்து தகவல்களை வழங்குவதற்கு பொது ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு தவறிவிடுவதாக வர்ணனையாளர்கள் வாதிக்கின்றனர். பிரிவின் குறைந்தபட்ச வரம்பினை எட்டாமை சார்ந்த அச்சமானது நல்லெண்ணத்துடன் பொது அதிகாரிகள் தகவல்களை பகிர்வதில் தூண்டுதல் அற்றவர்களாகும் நிலை குறித்து இந்த கருத்துக்கள் இலக்கு வைத்திருந்தன.

### (c) இரகசிய மறைகாப்பு பிரிவு

ஆரம்ப RTI சட்டமூல வரைபின் **பிரிவு 31**ஆனது, ‘இந்த சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினால் எந்தவொரு தகவலுக்கும் அணுகும் வசதி வழங்குதலானது குறித்த தகவலை வெளியிடுவதற்கான பொது அதிகார சபையின் அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டதாக கொள்ளப்படக் கூடாது’ எனத் தெரிவிக்கின்றது.

இந்த சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களை பொது மக்களுக்கு வெளியிடுவதற்கு பயன்படுவதில் இருந்து தடுக்கும் பிரிவின் தன்மையின் குறித்து வர்ணனையாளர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். எடுத்துக்காட்டாக, தமது கதைகளில் RTI கோரிக்கைகளின் மூலம் பெறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதில் இருந்து தாம் தடுக்கப்படுவதாக ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். ஒட்டுமொத்த RTI சட்டவாக்கத்தின் நோக்கத்தையும் இந்த பிரிவு விரக்தி கொள்ளச் செய்கின்றது என்ற கருத்தினை வர்ணைனையாளர்கள் முன்வைத்தனர்.

### (d) செயல்திறன் மிக்க வெளிப்படுத்தல் பிரிவுகளின் பலவீனம்

வருடாந்தம் அமைச்சுக்களால் வெளியிடப்படும் தகவல்களின் அளவினை RTI சட்டம் அதிகரிக்க வேண்டும் என வர்ணனையாளர்கள் வலியுறுத்தினர். வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவீனங்கள் குறித்த தகவல்கள் ‘அமைச்சர்களின் அறிக்கை’ என்ற அடிப்படையில் பிரசுரத்திற்கு விலக்கப்பட்டுள்ளமையானது, ‘செயல்திறன் மிக்க வெளிப்படுத்தல்’ என்ற சர்வதேச தரங்களை எட்டுவதற்கு தவறியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.[6]

### (e) பூரணத்துவத்தை உறுதி செய்யும் காலக்கெடுக்கள் இல்லை

ஆரம்ப RTI சட்டமூல வரைபின் **பிரிவு 25 (1)இன் கீழ்,** தகவல் கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதற்காக தகவல் அதிகாரிகளுக்கு ஆகக்கூடியதாக 14 வேலை நாட்கள் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த 14 நாட்கள் காலக்கெடு கடக்கும் போது கோரிக்கையானது தன்னிச்சையாக நிராகரிக்கப்படும் நிலை குறித்து குறிப்பிடத் தவறியமையை வர்ணனையாளர்கள் குறிப்பிட்டனர். இந்த விடயத்தை உள்ளடக்க மறுக்கின்றமையானது, அதீத கால தாமதத்தினால் நிவாரண பொறியமைப்புக்கான (எ.கா. தகவல் ஆணைக்குழு மற்றும்

[6] பிரிவு 8, ஆரம்ப RTI மாதிரி சட்டமூலம் Verite Research, *op. cit.*

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கான முறையீடு) அணுகும் வசதியை RTI கோருபவர்கள் பெற இயலாது பாதிக்கப்படும் நிலையும் அவதானத்திற்கு கொள்ளப்பட்டது.

### (f) பிரமாணத்திற்குள் பொது சேவைகள் உள்ளடக்கப்படல்

ஆரம்ப RTI சட்டமூல வரைபின் **பிரிவு 40**இல் பொது அதிகார சபைகளுக்கான வரைவிலக்கணமானது "எந்தவொரு பொது சேவையையும் வழங்கும் கலப்பு-பொது அல்லது தனியார் அங்கம் அல்லது நிறுவனம்' எனக் குறிப்பிடுகின்றது.

சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்ட அங்கங்கள் குறித்த குறிப்பிட்டதக்க குழப்பத்தை இந்த வரைவிலக்கணம் ஏற்படுத்தலாம் என வர்ணனையாளர்கள் எச்சரித்தனர். சட்டத்தில் 'பொது சேவை' என்பது தெளிவான வரைவிலக்கணத்தை கொண்டிருக்காமை சார்ந்ததாக இந்த எச்சரிக்கை அமைந்திருந்தது.

### (g) தடை செய்தல் கட்டணத்திற்கு பரிகாரம் இல்லை

ஆரம்ப RTI சட்டமூல வரைபின் **பிரிவு 25(2)**ஆனது, 'கட்டணத்தின் தகவல்களை வழங்கும் மேலதிக கட்டணம் போன்ற கொடுப்பனவினை கோருவதற்கு' தகவல் அதிகாரிக்கு அதிகாரத்தை வழங்குகின்றது. நியாயமற்ற அல்லது தடைசெய்தலுக்கான கட்டணம் ஒன்றிற்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடன் இணைந்ததாக இந்த அதிகாரம் இல்லை என வர்ணனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## 4. தகவலறியும் சட்டமூலம்இ 2015.

2015 டிசம்பர் 3ஆம் திகதி தகவலறியும் சட்டமூலம் 2015, அமைச்சரவை அனுமதியைப் பெற்றது.

**ஆரம்ப மாதிரி சட்டமூலத்தில் முன்னேற்றங்கள்**

### (a) மட்டுப்படுத்தப்பட்ட விலக்குகள்

RTI கோரிக்கைகள் மறுக்கப்படுவதற்கான அளவினை 2015ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூலம் குறைக்கின்றது. உதாரணமாக, புதிய பிரிவான (5)ஈ,ஆனது, 'மூன்றாந்தரப்பின் போட்டி நிலையை பாதிக்குமாயின்' தகவல் கோரிக்கை நிராகரிக்கப்படலாம் எனக் குறிப்பிடுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட 'வர்த்தக ஆர்வங்கள்' என்ற பரந்த விளக்கத்தில் இருந்து இந்த மொழிப்பிரயோகம் வெளியில் வருகின்றது. இயற்கையில் முழுமையாக நடவடிக்கைப்பூர்வமான நடவடிக்கையின் அடிப்படையில் RTI கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதில் இருந்து தடுக்கின்றது.

### (b) இரகசிய மறைகாப்பு பிரிவு நீக்கம்

ஆரம்ப மாதிரி சட்டமூலத்தில் இருந்த 'இரகசிய மறைகாப்பு பிரிவு' என்பது 2015ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூலத்தில் நீக்கப்பட்டுள்ளது. இந்த நீக்கமானது குற்றவியல் தடையிலிருந்து சுதந்திரமாக ஊடகவியலாளர்களும், ஏனைய பங்குதாரர்களும் RTI கோரிக்கைகளின் மூலம் பெறப்பட்ட தகவல்களை பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு இயலுமாக்குவதனை உறுதி செய்கின்றது.

**(c) உறுதியான செயல்திறன் மிக்க வெளிப்படுத்தல் பிரிவு**

2015ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூலம், 'வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு, அனைத்து திட்டங்கள், உத்தேச செலவீனங்கள் மற்றும் வழங்கப்பட்டமை தொடர்பான அறிக்கைகளை குறிப்பிட்டு' **பிரிவு 8(2).**[7] ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கையின் அளவின் கீழ் உள்ளடக்குகின்றது.[8] 'செயல்திறன் மிக்க வெளிப்படுத்தல்' என்பதன் அடிப்படையில் அமைச்சுக்களின் நிதி அறிக்கையிடல் மற்றும் நம்பகத்தன்மையை இது வலுப்படுத்துகின்றது.

**(d) உள்ளடக்கப்பட்ட காலக்கெடுக்கள்**

2015ஆம் ஆண்டு தகவலறியும் உரிமை சட்டமூலத்தின் **பிரிவு 25(5)இல்,** RTI கோரிக்கையின் பூரணத்துவத்தை 21 நாட்களுக்கு மேற்பட்டதாக காலக்கெடுவினை பொது அதிகாரி ஒருவர் அதிகரிக்கக் கூடாது என குறிக்கின்றது. மேலம், பிரிவு 31(1)(இ)இன் கீழ், பொது அதிகார அங்கமானது 21 நாட்களுக்குள் பூரணமடைவதற்கு தவறும் சந்தர்ப்பத்தில் தனிநபர் ஒருவர் மேன்முறையீடு செய்வதற்கான உரிமை உள்ளது. ஒட்டுமொத்தமாக, RTI கோரிக்கையுடன் சம்பந்தப்பட்ட அதிகரித்த தாமதங்களுக்கு பரிகாரத்தை நாடுவதற்கான தனிநபர் ஒருவரின் இயலுமையை இது வலுப்படுத்துகின்றது.

**(e) தடைசெய்தல் கட்டணம் தொடர்பான மேன்முறையீடு**

அதிகரித்த கட்டணத்தினால் துன்புற்ற தனிநபர் ஒருவருக்கு, தகவல் அதிகாரியின் தீர்மானத்தை மேன்முறையிடும் செய்யும் உரிமையை **பிரிவு 31(1) (உ)** வழங்குகின்றது. மேலதிகமாக, 'தகவல் வழங்குவது தொடர்பில், செயல்திறன் மிக்க வெளிப்படுத்தல் கோட்பாட்டின் அடிப்படையில் கட்டணப் பட்டியலை' நிர்ணயிப்பதனை தகவலறியும் உரிமை ஆணைக்குழுவின் கடமையாக **பிரிவு 14 (உ)** விளக்குகின்றது. ஒட்டுமொத்தமாக, இந்த மேலதிக சேர்க்கைகள் RTI கோரிக்கைகளுக்கான தடைசெய்த மற்றும் நியாயமற்ற கட்டணங்களை பொது அதிகாரிகள் அறவிடுவதில் இருந்து தடுக்கின்றது.

**(f) தரவு முகாமைத்துவத்தில் தகவல் ஆணைக்குழுவின் வகிபாகத்தை வலுப்படுத்தல்**

தகவலறியும் உரிமை ஆணைக்குழுவானது 'பொது அதிகாரிகளுக்கான முறையான அறிக்கை முகாமைத்துவத்திற்கான வழிகாட்டிகளை விளக்கமளிக்க' முடியும் என **பிரிவு 14(ஏ)** தெரிவிக்கின்றது. தரவானது முறையான வகையில் பெறப்பட்டு, சேகரிக்கப்படுதலை உறுதி செய்யும் பாரிய வகிபாகத்தை ஆணைக்குழு வகிப்பதனை இந்த மேலதிக வகிபாகம் உறுதி செய்கின்றது. எனவே, பொது அதிகார சபைகளில் RTI பூரணத்துவத்தின் வினைத்திறனை இந்த சேர்க்கை அதிகரிக்கின்றது.

**(g) சட்டம்சார் மேற்பார்வையை உறுதிப்படுத்துகின்றது**

ஆரம்ப மாதிரி சட்டமூலத்தின் **பிரிவு 35 (1)இல்,** ஆணைக்குழுவானது தமது செயற்பாடுகள் தொடர்பில் 'ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு முறை' அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இந்த அறிக்கை ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் அதனை சமர்ப்பிப்பது ஜனாதிபதியின் கடமையாகும்.

எவ்வாறாயினும், தகவலறியும் சட்டமூலத்தின் **பிரிவு 37 (1)இன்** கீழ், அறிக்கையின் பிரதியை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்து விட்டு, ஆணைக்குழுவானது நேரடியாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த திருத்தமானது தகவலறியும் உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பான சட்டம்சார் மேற்பார்வை மற்றும் பொது அறிவினை அதிகரிக்கின்றது.

---

[7] Section 8(2)(v) Right to Information Bill, 2015.

[8] பிரிவு 8 (1) (v) தகவலறியும் சட்டமூலம், 2015

## 2015ஆம் ஆண்டு தகவலறியும் உரிமை சட்டமூலம் தொடர்பான பரிந்துரைகள்

### (a) அம்பலப்படுத்துவோர் பாதுகாப்பை வலுப்படுத்தல்

2015ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூலமானது, ஆரம்ப மாதிரி சட்டமூலத்தின் அம்பலப்படுத்துவோர் பிரிவுக்கான சொற்கோடலில் மாற்றம் செய்யவில்லை.[9] பலவீனமான அம்பலப்படுத்துவோர் பிரிவினை தக்கவைத்துக் கொள்ளல், பொது அதிகாரிகள் தன்னிச்சையாக கலந்து கொள்வதில் இருந்து விலகிக் கொள்ளல், நிதி முகாமைத்துவம், மோசமான வள ஒதுக்கீடு மற்றும் நிறுவனத்திற்குள் ஊழல் குறித்த நல்லெண்ண வெளிப்படுத்தல் என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும். இதன் காரணமாக, 2015ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூலம் தமது அம்பலப்படுத்துவோர் பாதுகாப்பினை வலுப்படுத்தல் வேண்டும் (*கீழே தரப்பட்ட மாதிரி பிரிவினைப் பார்க்க).*

### (b) தாமதித்த RTI கோரிக்கைகளுக்கு அபராதத்தை அறிமுகப்படுத்தல்

2015ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூலம், தகவல் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான கடப்பாட்டினை தனியாக அதிகாரிகளுக்கு வழங்குவதாக இல்லை. இந்த நீக்கலானது, உரிய நேரத்தில் தகவல் கோரிக்கைகளை செயற்படுவதனை உறுதி செய்வதற்கு அதிகாரிகளை தூண்டுவதாக இல்லை. மேலும், தீய எண்ணத்தில் தகவல் கோரிக்கைளை நியாயமற்ற வகையில் நீக்குவதில் இருந்து அதிகாரிகளை போதியளவு விலக்கி வைப்பதாகவும் இந்த சட்டமூலம் இல்லை.

எனவே, இந்திய RTI சட்டத்தில் இருந்து உதாரணத்தை எடுத்து, 2015ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூலமானது, கோரிக்கைகளை முழுமை செய்யாத தகவல் அதிகாரிகளுக்கான அபராதங்களை அறிமுகப்படுத்தும் வகையில் திருத்த வேண்டியது அத்தியாவசியமாகும் (*கீழே தரப்பட்ட மாதிரி பிரிவினைப் பார்க்க).*

### (c) 'பொது அதிகாரிகள்' என்பதிலிருந்து 'பொது சேவை' என்பதனை விலக்கவும்

'பொது சேவை அல்லது பொது கருத்தினை முன்னெடுக்கும் தனியார் பிரிவு அல்லது நிறுவனம் ஒன்றினை' உள்ளடக்கும் என பொது அதிகார சபை என்பது **பிரிவு 43** விளக்குகின்றது. சட்டத்தில் தெளிவான விளக்கம் இன்மையால், 'பொது சேவை' முன்னெடுக்கும் அங்கங்களை இந்த பிரிவு உள்ளடக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

எவ்வாறாயினும், 'பொது செயற்பாடு' என்ற பதப்பிரயோகம், சட்ட ரீதியான தெளிவினை கொண்டிருப்பதுடன், அரசுக்கான பொதுவான செயற்பாடுகளை முன்னெடுக்கும் அங்கங்களை விளக்குகின்றது. எனவே, இந்த பிரிவின் அளவினை விளக்குவதற்கு 'பொதுச் செயற்பாடு' எனறப் பதப்பிரயோகம் மாத்திரம் போதுமானதாகும்.

### (d) RTI சார் இணைய நிர்வாகத்தை வலுப்படுத்தல்

இணைய நிர்வாகம் சார்ந்து தமது பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான பிரமாணத்தை 2015ஆம் ஆண்டு தகவலறியும் சட்டமூலம் கொண்டுள்ளது. செயல்திறன் மிக்க வெளிப்படுத்தல் மற்றும் தகவல் காட்சிப்படுத்தல் பிரிவுகள் பொது அதிகாரிகள் கோரப்படும் தகவல்களை இணையத்தளத்தில் பிரிசுரிப்பதற்கான கடமைசார் குறிப்புவதியை கொண்டிருக்க வேண்டும் (தமது அலுவலகத்தில் காட்சிப்படுத்தலுக்கு மேலதிகமாக). இணைய நிர்வாகம் குறித்த இந்த அக்கறையானது பொது மக்களினால் RTI அணுகும் வசதியையும், பயன்பாட்டினையும் வலுப்படுத்துகின்றது. (*கீழே தரப்பட்ட மாதிரி பிரிவினைப் பார்க்க).*

[9] பிரிவு 41, தகவலறியும் சட்டமூலம், 2015.

### (e) Allow Any Person to Receive an Expedited Response to Requests Concerning the Life and Liberty of A Person

The Right to Information Bill 2015 displays an inconsistency between sections 24(5)(c) and 25(3). Section 24(5)(c) permits an expedited response where the citizen making the request believes that the information is necessary to **safeguard the life or liberty of a person**. However, Section 25(3) stipulates an expedited response only if the request for information concerns the life and personal liberty of **the citizen making such request**.

Section 25(3) should be amended to ensure that a request for information that is necessary to safeguard the life or liberty of **any person** including a person other than the citizen making the request shall receive a response within forty-eight hours.

This is to enable families of arrested, disappeared or missing persons to request information from the relevant authorities and receive information without delay.

## 5. 2015 தகவலறியும் சட்டமூலத்திற்கான பிரேரிக்கப்பட்ட திருத்தங்கள்

### (a) அம்பலப்படுத்துவோர் பாதுகாப்பு வலுப்படுத்தப்படல்

பொது அதிகார சபையின் ஊழியர் ஒருவரினால் தகவல் வெளியிடப்படல் அல்லது வெளிப்படுத்தப்படல்

**40.** (1) தவறுசெய்தல் அல்லது ஆரோக்கியத்திற்கு, பாதுகாப்பிற்கு அல்லது சுற்றுச்சூழலிற்கு தீவிரமான ஆபத்தை வெளிப்படுத்தும் நிகழ்வு தொடர்பில் தகவலை வழங்கியமைக்காக, அவர்கள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் செயற்பட்டிருப்பின், தகவலானது கணிசமாக உண்மையானதாக நம்பகமான வழியில் இருப்பின் மற்றும் தவறுசெய்தல் குறித்த ஆதாரங்களை அல்லது ஆரோக்கியத்திற்கு, பாதுகாப்பிற்கு அல்லது சுற்றுச்சூழலிற்கு தீவிரமான ஆபத்தை வெளிப்படுத்தியிருப்பின், சட்ட அல்லது வேலைவாய்ப்பு கடமையின் எந்தவொரு மீறல் சாராமலும், எந்தவொரு சட்ட, நிர்வாக அல்லது வேலைவாய்ப்பு சார் தடைக்கு எவரும் உள்ளாக்கப்பட முடியாது.

(2) துணை பிரிவு நோக்கத்திற்காக (1)இ குற்றச்செயல், சட்ட பொறுப்பினை பூர்த்தி செய்யத் தவறல், சட்டத்தை மீறல், ஊழல் அல்லது நேர்மையீனம், அல்லது பொது அங்கம்சார் மோசமான நிர்வாகம் என்பன தவறுசெய்தல் என்பதில் உள்ளடங்கும்.

### (b)தாமதித்த RTI கோரிக்கைகளுக்கு அபராதத்தை அறிமுகப்படுத்தல்

குற்றங்கள்.

**39.** மேன்முறையீட்டிற்கான எந்தவொரு முறையீட்டிற்கான நேரத்தையும் தகவலறியும் உரிமை ஆணைக்குழும் தீர்மானிக்கும் போது, தகவல் அதிகாரி எந்தவொரு நியாயமான காரணமும் இன்றி, தகவலுக்கான விண்ணப்பத்தை பெறத் தவறினால் அல்லது பிரிவு 25(1)இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகவல்களை அளிக்கவில்லையெனின், அல்லது தகவலுக்கான கோரிக்கை நிராகரித்தால், அல்லது தெரிந்தே தவறாக, முழுமையற்று அல்லது தவறாக வழிநடத்தும் தகவலை வழங்கினால், அல்லது கோரப்பட்ட தகவலை அழித்தால் அல்லது தகவலை அளிப்பதில் எந்த வகையிலானது தடை ஏற்படுத்தினால், விண்ணப்பம் பெறப்பட்ட நாளில் இருந்து அல்லது தகவல் வழங்கப்பட்ட நாளில் இருந்து நாளொன்றுக்கு 500 ரூபாய் அபராதம் அளிக்கப்படும். எனவே எவ்வாறாயினும், இந்த அபராதத்திற்கான அபராதம் ஐம்பதாயிரம் ரூபாயை கடக்கக் கூடாது.

**(b)**

**'பொது அதிகார சபைகள்' என்பதிலிருந்து 'பொது சேவை' என்பதனை விலக்கல்**

உரைவிளக்கம் **43.** இந்த சட்டத்தில், சூழ்நிலைக்கு ஏற்ற வகையில்-

"பொது அதிகார சபை" என்பது –

(எ) ஒப்பந்தத்தின் கீழ், பங்காளித்துவத்தில், உடன்படிக்கையொன்றில், அல்லது அனுமதிப் பத்திரத்தின் கீழ் அரசாங்கம் அல்லது அதன் கிளைகளினால் அல்லது உள்;ர் அங்கம் ஒன்றினால், ஆனால் அதன் சட்டம்சார் அல்லது பொது செயற்பாட்டினால் உள்ளடக்கப்படும் நடவடிக்கைகளின் அளவுக்கு செயற்படும் சட்டரீதியான அல்லது பொதுச் செயற்பாட்டினை முன்னெடுக்கும் தனியார் அங்கம் அல்லது நிறுவனம்.

**(c) RTI சார் இணைய நிர்வாகத்தை வலுப்படுத்தல்**

அமைச்சர்களின் அறிக்கை வெளியிடல்

**8.(4)** துணைப்பிரிவு (1), (2) மற்றும் (3) குறிக்கும் அறிக்கைகளாவன: -

(a) உத்தியோகப்பூர்வ மொழியில் வெளியிடப்பட்டு, இலத்திரனியல் வடிவில் பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
(b) பொது மக்கள் பார்வையிடலுக்கு கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் அத்துடன், அவற்றின் பிரதிகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தினை செலுத்தும் எந்த நபருக்கும் அளிக்கப்படலாம்.

தகவல் அதிகாரிகள் மற்றும் அறவிடப்படும் கட்டணங்களின் தகவல்களை பொது அதிகார சபைகள் காட்சிப்படுத்தல

**26.(1)** பின்வரும் விடயங்களை குறிப்பிட்டு தமது அலுவலக வளாகத்திற்குள் எளிதில் பார்க்கக் கூடிய இடத்தில், **தமது உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திலும்** ஒவ்வொரு பொது அதிகாரசபையும் காட்சிப்படுத்தல் வேண்டும்.

(அ) ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களின் தொடர்பு விபரங்கள்
(ஆ) தகவல் அதிகாரியின் தொடர்பு விபரங்கள்
(இ) நியமிக்கப்பட்ட அதிகாரியின் தொடர்பு விபரங்கள்
(ஈ) குறித்த பொது அதிகார சபையிடமிருந்து தகவல் பெற்றுக் கொள்வதற்கு அறவிடப்படும் கட்டணம்.

பொது அதிகார சபை அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல்

**10.** ஒவ்வொரு பொது அதிகார சபையும் ஆணைக்குழுவிற்கு தமது வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அவை, அலுவலகத்திலும், **அதன் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திலும்** பின்வரும் தகவல்கள் உள்ளடங்கலாக பொது மக்களுக்கு அணுகக் கூடியதாக இருத்தல் வேண்டும்-

(a) வருடத்தில் பெறப்பட்ட கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட தகவல்கள்:

(b) வருடத்தில் சேகரிக்கப்பட்ட மொத்த கட்டணம்:

(c) பிரிவு 5இன் கீழ் நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை:

(d) ஆணைக்குழுவின் வழிகாட்டலின் கீழ் தகவல் வழங்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை: மற்றும்

(e) வேளிப்படைத்தன்மையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான ஏதேனும் ஆலோசனைகள்

Decision on requests submitted under section 24

**(e) Allow Any Person to Receive an Expedited Response to Requests Concerning the Life and Liberty of A Person**

**25(3)** A request for information that is necessary to safeguard the life or liberty of **any person** including a person other than the citizen making the request shall receive a response within forty-eight hours.